**அறிவாற்றல் சமூகத்திற்கான கல்விச் செயற்திட்டம் - 2015**

---

அறிவாற்றல் சமூகத்திற்கான கல்விச் செயற்திட்டத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2007 திசெம்பர் 18 ஆந் திகதிய 2371 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கை மற்றும் 0091-எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.02(ஏ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம், கல்வி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவராக உள்ளது. ஊழியர் சந்தை தேவைகளுக்கான இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைக் கல்வித் தொடர்பை அதிகரித்தலின் மூலம் கல்விகற்ற இளைஞர்களின் வேலைவாய்ப்பை அதிகரிப்பதே செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட விளைவாகும். செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட விளைவானது இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வியின் தரம், பொருத்தத்தன்மை, செயலாற்றல், மற்றும் அவற்றை அணுகுவதிலுள்ள சமத்துவம் என்பவற்றை மேம்படுத்தல் ஆகும். கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 11,267 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 105 மில்லியனானதுடன், அதில் ஆசிய அபிவிருத்தி வங்கியானது ரூபா 6,955 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 65 மில்லியனை கடனாகவும் ரூபா 1,605 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 15 மில்லியனை மானியமாகவும் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் செயற்பாடுகளை 2008 மார்ச் 07 இல் தொடங்கியிருந்ததுடன் 2013 யூன் 30 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. 2014 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடிதத்தின்படி, கடனின் பூர்த்தியாக்கல் திகதி 2014 ஒக்தோபர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது. மேலும், ஆசிய அபிவிருத்தி வங்கியின் 2014 பெப்ரவரி 14 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் மானியத்தின் பூர்த்தியாக்கல் திகதி 2015 யூலை 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது. எனினும், மானிய பெறுகைகளில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளுக்கான நிதிக்கூற்றுக்கள் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4. கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று

ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது
அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் மற்றும் மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்றும்,

(உ) கடன் மற்றும் மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடன் மற்றும் மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்ததென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஊ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கிய சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலங்கள் | கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | 2015 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்குட | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | 2015 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொ மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ஐ.அ.டொ மில்லியன் | ரூபா. மில்லியன் |
| ஏடிபீ –கடன் | 65.00 | 6,955.00 | - | - | 63.80 | 6,264.19 |
| -மானியம் | 15.00 | 1,605.00 | 15.80 | 14.07 | 14.97 | 1,751.34 |
| இலங்கை அரசாங்கம் | 25.32 | 2,707.00 | 01.69 | 1.69 | 25.32 | 3,589.48 |
| மொத்தம் | **105.32** | **11,267.00** | **17.49** | **15.76** | **104.09** | **11,605.01** |

## 3.2 பௌதீக முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மேலே குறிப்பிட்டதன் பிரகாரம், காலி மாவட்டத்திலுள்ள உடுகம மஹா வித்தியாலத்தின் விளையாட்டு மைதானத்தின் நிர்மாண வேலைகளை பூர்த்திசெய்வதற்கான மானியத்தின் காலப்பகுதி மற்றும் கேகாலை மாவட்டத்திலுள்ள டிப்பிற்றிய மஹா வித்தியாலய முன்னேற்ற வேலைகள் மீதான பிடிகாசினை விடுவித்தல் என்பன 2015 யூலை 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது. மேலும், செயற்திட்ட விளைவு மதிப்பீட்டு ஆய்வு அறிக்கையை பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது மேலே குறிப்பிடப்பட்ட வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்ட விளைவு மதிப்பீட்டு ஆய்வு அறிக்கையின் 4.3 ஆம் பந்தியின் பிரகாரம், 2127 பாடசாலைகளுக்கான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வசதிகள் செயற்திட்டத்தால் வழங்கப்பட்டிருந்தது. எனினும், வரிசை அமைச்சிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், ''பாடசாலை வலை'' ஊடான இணையத்தள இணைப்புக்கள் நாடு முழுவதிலுமுள்ள 1644 பாடசாலைகளுக்காக மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. 67 சதவீதமான பாடசாலைகள் செயற்திட்டத்தல் வழங்கப்பட்ட கணனிகள் மற்றும் ஆய்வுகூட வசதிகளை பராமரிப்பதற்காக நிலைத்திருக்ககூடிய திட்டங்களை தயாரித்திருக்கவில்லை என அளவை பெறுபேறுகள் சுட்டிக்காட்டியது. மேலும், கணக்காய்வால் சேகரிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், நாடு முழுவதிலுமுள்ள 350 தேசிய பாடசாலைகளில் 76 தேசிய பாடசாலைகள் ''பாடசாலை வலை'' ஊடாக வழங்கப்பட்ட இணையத்தள வசதிகளானது முறைமையின் மந்தமான செயற்பாடு மற்றும் தொடர்ச்சியான செயலொழிவு காரணமாக அத்தகைய வசதிகளை பயன்படுத்துவதில்லை.